DEPOSITION OF WITNESS
(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM
C.C.No.350/2025
PW - 3

| | | |
|---|---|---|
| Name | : | கபில்தேவ் (Lw - 3) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(1** முதல் **4** எதிரிகள் ஆஜர் **5**ம் எதிரி ஆஜர் இல்லை **BNSS** பிரிவு **355-**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.)**

முதல் விசாரணை **Date : 05.05.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், அரியூர்நாட்டில் குடியிருந்து ஏகாலைவா வித்யா மந்தீர் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். **(**சாட்சி எதிரிகளை அடையாளம் காண்பித்தார்**.)** 5ம் எதிரியை எனக்கு தெரியும். அவர் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை.

இவ்வழக்கின் 5ம் எதிரி கௌரிசங்கருக்கும் ஞானமூர்த்திக்கும் ஏற்கனவே சொத்து பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 04.12.2025ம் தேதி மதியம் சுமார் 02.00 – 03.00 மணியளவில் நான் எனது காட்டில் மிளகு பரித்து கொண்டிருந்தேன். அப்போது பக்கத்துகாட்டில் சத்தம் போட்டு கொண்டிருந்தார்கள். நான் சத்தம் கேட்டு சென்றேன். சம்பவ இடத்தில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியானவர் போலிசார் விசாரணையில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணைக்கு அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. நீதிமன்றம் அனுமதி அளித்தது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலிசார் என்னை விசாரித்தபோது கடந்த 12.04.2025ம் தேதி மதியம் 01.00 மணியளவில் நான் எனது தோட்டத்தில் மிளகு பரித்து கொண்டிருந்தபோது

ஞானமூர்த்திக்கும் சொந்தமான வயலில் ராஜமாணிக்கத்திற்கு சொந்தமான மாடு மேய்ந்துகொண்டிருந்ததை ஞானமூர்த்தி பார்த்து அதை முடுக்கிவிட்டு அங்கு இருந்து தெம்பளம் வரை சென்று மீண்டும் வீட்டிற்கு வரவேண்டி அவர்கள் வயல் வழியாக சுமார் 03.00 மணிக்கு வந்துகொண்டிருந்தபோது மீண்டும் ஞானமூர்த்தியின் வயலில் ராஜமாணிக்கத்தின் மாடு மேய்ந்துகொண்டிருந்ததாகவும், அருகில் உள்ள திருச்சி தினேஷ் தோட்டத்திற்கு அருகில் இருக்கும் மண் பாதையில் நின்று கொண்டிருந்த ராஜமாணிக்கத்தின் பேரன் திவ்யானந்தை பார்த்து ஞானமூர்த்தி ஏண்டா இப்படி காட்டுல மாடு மேய்க்கிறிங்க என்று கேட்டபோது இது எங்க காடு உங்களுக்கு காடும் இல்லை ஒன்றும் இல்லை ஒழுங்கா போடா தேவடியா பயா என திவ்யானந் கெட்ட வார்த்தையால் திட்டியதாகவும், அருகில் இருந்த எதிரி யுவன்சங்கர் வாதியை பார்த்து உனக்குதான் குழந்தையே இல்லையே அப்புறம் எதுக்குடா உனக்கு காடு வேனும்னா உன் பொண்டாட்டியை கூட்டிக்கிட்டு வந்து என்கிட்டவிடுடா தேவடியா பயா என திட்டியதாகவும், ஞானமூர்த்தி கோபத்தில் கையை தூக்கிக்கொண்டு அவர்கள் அருகில் சென்றபோது எதிரி திவ்யானந்த் ஞானமூர்த்தியின் இரண்டு கைகளையும் பிடித்து கொள்ள எதிரி யுவன்சங்கர் ஞானமூர்த்தியின் முகத்தில் ஓங்கி பலமுறை குத்தியதாகவும், பின்பு எதிரிகள் செல்வகுமார், மோகன்தாஜ் கௌரிசங்கர் ஆகியோர் அங்கு வந்து வாதியை கீழே தள்ளி சரமாரியாக அடித்ததாகவும், பின்பு எதிரி செல்வகுமார் அருகில் கிடந்த முருங்கை கட்டையை எடுத்து ஞானமூர்த்தியின் தோல்பட்டையிலும், முதுகிலும் அடித்ததாகவும் சத்தம்கேட்டு நானும் எனது அண்ணனும் அவர்களை விலக்கிவிட எதிரிகள் வாதியை பார்த்து உனக்கு ஆயுள் ஜாஸ்தி இன்னைக்கு தப்பிச்சுட்ட என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல்விடமாட்டேன் என கொலை மிரட்டல் விடுத்ததாகவும் சொல்லிவிட்டு ஆஜர் எதிரிகள் எனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> இல்லை

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**